MODEL QUESTION PAPER -1
FOR REDUCED SYLLABUS 2020-21
Subject Code : (04)
TAMIL

Time : 3 Hours 15 Minutes] [Max.Marks : 100
[ Total No of Questions : 50 ]

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.

3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

## பகுதி – ஒன்று

I. ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 1X10=10

1. கடவுளுக்கான பெயர்கள் ஏதாவது இரண்டினைக் குறிப்பிடுக:
2. நாரையின் வெள்ளை நிறச் சிறகுகள் எதற்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது?
3. எல்லாம் அறிந்தவர்கள் இருக்கின்றார்களா?
4. ‘’தற்பரன்’’ எவ்வாறு வந்துதித்தான்?

5. ஒலிமாசு எவ்வாறு நம்மை பாதிக்கிறது?
6. இசை எழுப்பும் துளைக் கருவிகள் இரண்டினைக் குறிப்பிடுக:
7. பக்தி இயக்கத்தில் ஒலித்த மிக முக்கியமான முழக்கம் எது?
8. ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள் என்று கூறியது யார்?
9. வைரவன் செட்டியார் விஷம் எனநினைத்து உண்டது எதனை?
10. மஞ்சனாதி மலையில் சிறுமி விளையாடிய விளையாட்டின் பெயர் என்ன?

## பகுதி - இரண்டு

அ எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 4X2=8

11. நாம் எதைக் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார்?
12. கரிகால் சோழனின் மூதாதையர் செய்த சாதனையாக வெண்ணிக்குயத்தியார் கூறுவது யாது?
13. வயிரம் பாய்ந்த மரம் போல நிலைபெறும் மூன்று பொருள்கள் பற்றி திரிகடுகம் கூறுவது யாது?
14. மரத்திற்கும் பூமிக்கும் உள்ள உறவை கவிஞர் எவ்வாறு சித்தரிக்கின்றார் ?
15. நபிகள் நாயகம் எவற்றுக்கெல்லாம் கருப்பொருளாக விளங்குகின்றார்?

ஆ எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2=6

16. போக்குவரத்து இரைச்சல் எவ்வாறு வரி குதிரையையும் சிட்டுக்குருவியும் பாதிக்கின்றது:

17. படிப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்பதை ஜீவா அவர்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?
18. பழங்காலத்தில் ஓவியங்களை பெரிதும் விரும்பிய இரண்டு மன்னர்களைப் பற்றிய செய்திகளை எழுதுக:
19. ராமானுஜம் உப்புமா செய்ய வேண்டும் என்று கூறிய சமயத்தில் குப்புசாமி என்ன செய்வதாக கூறினான்?

இ எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 3X2=6

20. யோஷிகியின் நகைச்சுவையைப் பற்றி எழுதுக:
21. ''சுயநலம்'' சிறுகதையில் வேலப்பனின் வேலை போனதற்கு மூல காரணம் என்ன?
22. முருகேசன் அவசரமாக கிளம்பி செல்வதற்கான காரணங்களாக சரசுவிடம் கூறியவற்றை எழுதுக:
23. மலைப் பாதைகளில் பயணம் எவ்வாறு இருக்கும் என்று கூறப்படுகிறது ?

## பகுதி - மூன்று

அ எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 2X3=6

24. '' காலத்தை வென்றவளே எங்கள் தமிழ்த்தாயே,
கட்டிளமை உள்ளவளே எங்கள் தமிழ்த்தாயே!''
25. ''அருளினால் ஆகும் அறம்''!
26. ''இந்த தூசி மேடு உனக்கு ஒரு பாரமா?''

ஆ ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

27. ''திருக்குறளின் உள்ளடக்கத்தில் பழமையும் புதுமையும் விரவிக்கிடக்கின்றன''!
28. ''சாதி மற்றும் ஆண் பெண் சமத்துவத்தைப் பறைசாற்றின''!

இ ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

29. ''அவனா நம்முடன் பணம் போடப் போகிறான்?''
30. ''மலைப் பாதைகளில் பயணம் செய்யும்போது நெஞ்சடைத்து உடல் விரைத்துக் கொள்ளும்!''

## பகுதி – நான்கு

அ எவையேனும் மூன்றிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 3X5=15

31. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கடவுளைப் பற்றி கூறும் கருத்துக்களை எழுதுக:
32. ஐங்குறுநூற்றுத் தலைவியின் காதல் மாண்பும் அறமாண்பும் ஒருங்கே சிறக்கும் தன்மையை விவரி:
33. ஊக்கமுடைமையின் சிறப்பினை திருவள்ளுவர் வழி நின்று எழுதுக:
34. ''நான் ஒரு மரமாக பிறந்திருந்தால்'' என்ற கவிதையின் பொருளை எழுதுக:

ஆ எவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

35. மிகை ஒலியினால் ஏற்படும் உடல் நலன் பாதிப்பு பற்றி விளக்கமாக எழுதுக:

36. வாழ்வாங்கு வாழ வள்ளுவம் காட்டும் நெறிகளை ஜீவாவின் வழிநின்று விளக்குக :

37. உயர்ந்த ரகம் என்ற நாடகத்தில் குப்புசாமி கதாபாத்திரம் பற்றி விளக்குக:

இ எதையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

38. ஜப்பான் பிடித்திருக்கிறதா என்று கேட்ட யோஷிகிக்கு கதாசிரியர் கூறியவற்றை எழுதுக:

39. வைரவன் செட்டியார் வைத்தியர் சாமியாரிடம் கூறிய மனக்குமுறல்களை எழுதுக:

40. சரசுவின் காலை நேரப் பணிகளை விளக்கமாக எழுதுக:

## பகுதி - ஐந்து

அ கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 5

41. ‘’ வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு’’

ஆ எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க: 4X2=8

42. கோடிட்ட இடங்களை நிரப்புக:

ஒலியின் அளவை _________ என்ற அளவு கோலினால் அளந்தனர்.

மொழி, இனஎல்லைகளைக் கடந்த மனித மகா காவியம் ________.

43. சொற்களின் பொருள் வேறுபாடு உணர்ந்து சரியான சொல்லை எடுத்து எழுதுக:

வீணை வாசிப்பது ஒரு _____ ( கலை/ களை)

மலையை _________ என்றும் சொல்லலாம் (கல்/ கள்)

44. எதிர்ச்சொல் எழுதுக:

உயர்வு X

உண்மை X

45. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

அற்புதம்

மெழுகுதிரி

46. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக:

காலம்பற டிபன் சாப்டியா?

ஸ்விம்மிங் இஸ் ஹெல்தி எக்சர்சைஸ்.

## பகுதி - ஆறு

அ கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:

1X5=5

47. '' திரைப்படத்தின் நன்மை தீமைகள்''

48. '' யாதும் ஊரே யாவரும் கேளிர்''

ஆ கீழ்க்காணும் வினாக்களில் ஒன்றிற்கு விடை எழுதுக:

1X5=5

49. பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக :

50. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

MODEL QUESTION PAPER -2
FOR REDUCED SYLLABUS 2020-21
Subject Code : (04)
TAMIL

Time : 3 Hours 15 Minutes] [Max.Marks : 100

[ Total No of Questions : 50 ]

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.

3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

## பகுதி - ஒன்று

I. ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 1X10=10

1. எண்ணத்திற்கு எட்டாதவர் யார்?
2. தேன் மயங்கு பாலினும் இனியது எது?
3. கணக்காயர் இல்லாத ஊர் நன்மை பயக்குமா?
4. இளவரசனாய் வந்துதித்தவன் யார்?

5. வியாபாரிகள் தங்கள் தொழிலுக்குத் துணையாக யாரைச் சேர்த்துக் கொண்டனர்?
6. இல்வாழ்வில் ஆணுக்குப் பெண் எவ்வாறு இருக்கவேண்டும் என்று வள்ளுவர் விரும்புவதாக ஜீவா அவர்கள் கூறுகின்றார்?
7. கருநாடகத்தில் பக்தி இயக்கம் எப்பொழுது நிலவியது?
8. யோஷிகி வெட்கப்படுவது எப்படி இருந்தது என்று கதாசிரியர் கூறுகின்றார்?
9. செட்டியார் எந்த தெய்வத்தை வேண்டிக் கொண்டார்?
10. மஞ்சனாத்தி மலையில் சிறுமியின் அப்பா ஜன்னலோர இருக்கையைப் பிடிப்பதற்குக் காரணம் என்ன?

## பகுதி – இரண்டு

அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 4X2=8

11. புலவர் குழந்தை அவர்கள் தமிழ்த்தாயின் அணிகலன்கள் என்று கூறும் நூல்கள் யாவை ?
12. வெண்ணிப் பறந்தலைப் போர் எந்த இரு அரசர்களிடையே நடைபெற்றது?
13. நன்று தீது எனச் சிறுபஞ்சமூலம் நவில்வன யாவை?
14. அற்புதமே என்று மனிதனை அழைத்து கவிஞர் இன்குலாப் கூறும் கருத்தினை எழுதுக
15. நபிகள்நாயகம் எவற்றுக்கெல்லாம் கருப்பொருளாக விளங்குகின்றார்?

ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2=6

16. சாலையில் இரைச்சலைக் குறைப்பதற்கான ஏதாவது இரண்டு யோசனைகளை எழுதுக:
17. அன்னியர் ஆட்சியில் இசைக்கலை அடைந்த அவல நிலையை எழுதுக:
18. பசவண்ணரின் பக்தி இயக்கத்தில் பங்காற்றிய வசனக்காரர்களைக் குறிப்பிடுக:
19. நெய்யைப் பற்றி ராமானுஜத்திற்கு சமையல்காரனுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதுக:

இ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 3X2=6

20. யோஷிகியின் நகைச்சுவையைப் பற்றி எழுதுக:
21. வேலப்பனின் குடும்பம் கட்டில் வேலையை எவ்வாறு பகிர்ந்து கொள்கிறது?
22. வைதியர் சாமியாருக்கும் வைரவன் செட்டியாருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக:
23. முருகேசனுக்குக் காய்ச்சல் வந்தால் அவன் என்ன செய்து கொள்வான்?

## பகுதி – மூன்று

அ. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 2X3=6

24. "காலத்தை வென்றவளே எங்கள் தமிழ் தாயே!"
கட்டிளமை உள்ளவளே எங்கள் தமிழ் தாயே!''
25. "ஊக்கம் உடையான் உழை!"
26. "கன்னி இளமை மயிலை காதலுடன் வரவேற்போம்!"

ஆ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

27. "திருக்குறள் மொழி இன எல்லைகளைக் கடந்து மனித மகாகாவியம்!"

28. "சமூக சீர்திருத்தத்திற்காகவே இத்தகைய இயக்கங்கள் தோன்றி இருக்கின்றன!"

இ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

29. ''என்ன வேலப்பா!'', தினசரி வெயிலில் இப்படி வியர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறாயே!"

30. ''மஞ்சனாத்தி மெயின் ரோட்டில் ஒரு டாக்டர் இருக்கார். அங்கேயே ஜிம்மியைக் கூட்டிக்கொண்டுப் போகலாம்"

## பகுதி – நான்கு

அ. எவையேனும் மூன்றிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 3X5=15

31. நாட்டு வாழ்த்துப் பாடலில் கவிஞர் கண்ணதாசன் கூறும் கருத்துக்களை எழுதுக:

32. ஒப்புரவறிதல் குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக:

33. பொங்கல் வரும் நேர்த்தியை கவிஞர் மு மேத்தா கூறும் விதத்தில் விவரித்து எழுதுக:

34. இயேசு உதித்த நிலையை எவ்வாறு இரட்சணிய யாத்திரிகம் விளக்குகின்றது ?

ஆ. எவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

35. ஜான் கீட்ஸ், ''மனித பருவங்கள்'' கவிதையில் கூறுவனவற்றை எழுதுக :

36. ஒலி மாசி பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை விளக்குக :

37. உயர்ந்த ரகம் நாடகத்தில், உயர்ந்த ரகத்திற்கு ஏற்றார் போல அமைக்கப்பட்ட குப்புசாமி கதாபாத்திரம் பற்றி எழுதுக:

இ. எதையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

38. சுயநலம் சிறுகதையில் மாதவராயர் விரித்த வியாபார வலையை விவரிக்க:

39. ''வயதான காலத்தில் அவரை நல்லா வச்சி இருக்க வேண்டாமா? என்று கேட்ட சாமியாருக்கு வேலாயுதம் கூறியவற்றை எழுதுக:

40. சரசுவின் முகம் பார்த்த மகன் கணேஷ் என்னவெல்லாம் செய்தான் என்பதை எழுதுக:

## பகுதி - ஐந்து

அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 5

41. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
    பேரறி வாளன் திரு.

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க:

4X2=8

42. கோடிட்ட இடங்களை நிரப்புக:
    மருந்தாகித் தப்பா __________.
    வெள்ளத்தனைய _______ நீட்டம்.

43. பொருத்துக:

| | | |
|---|---|---|
| செய்த்தனால் ஆகும் | - | செழுங்குலம். |
| வணக்கம் செய்த்தனால் ஆகும் | - | வசை |
| செய்த பொருளினால் ஆகும் | - | அறம் |
| அருளினால் | - | ஆகும் |

44. எதிர்ச்சொல் எழுதுக:
    புண்ணியம் X
    வெள்ளை X

45. கீழ்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக:
    உடல் சோர்வு
    கடற்கரைக் கோயில்

46. தமிழ்ச் சொற்களை எழுதுக:
    சினிமா தியேட்டர்
    சிம்பிள்

# பகுதி – ஆறு

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:

1X5=5

47. அன்றாட வாழ்வில் அறிவியல் .
48. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு.

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக:

1X5=5

49. உங்கள் பகுதியில் மருத்துவ மனை அமைத்து தரக்கோரி ஒரு விண்ணப்ப கடிதம் எழுதுக:
50. ''தன் கையே தனக்கு உதவி'' என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக: